

முத்தமிழ் அறிஞர், செம்மொழி நாயகர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு தலைமை பொதுக்குழு உறுப்பினர் மேடவாக்கம் ப.ரவி தலைமையில் புனித தோமையார்மலை தெற்கு ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் மேடவாக்கம் ஆர்.எஸ். லோகேஷ்வரா ஏற்பாட்டில் மேடவாக்கம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு ரூபாய் 9 லட்சம் மதிப்பீட்டில் பள்ளி மாணவர்களுக்கு பென்ச் மற்றும் டேபிள் வழங்கும் விழாவில் அமைச்சர், மாவட்டக் கழகச் செயலாளர் மா.சுப்பிரமணியன், தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி, எஸ். அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ. ஆகியோர் பள்ளிக்கு வழங்கினர். இதில் பாலவாக்கம் த.விஸ்வநாதன், பெருங்குடி எஸ்.வி.ரவிச்சந்திரன், ஜி.வெங்கடேசன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### திருவள்ளூரில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக

# 5 வழி தடங்களுக்கான மினி பஸ் சேவை!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தொடங்கி வைத்தார்!

திருவள்ளூர் ஜூன் 18;-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் புதிய விரிவான மினி பஸ் திட்டத்தினை தஞ்சாவூரில் தொடங்கி வைத்ததை தொடர்ந்து திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் நடைபெற்ற விழாவில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் , கலந்து கொண்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்காக 5 வழிதடங்களுக்கான மினி பஸ் சேவையினை தொடங்கி வைத்தார்கள்.

அப்போது சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் தெரிவிக்கையில்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் பேருந்து சேவை இல்லாத வழிதடங்களில் சிற்றுந்து சேவை வழங்கும் பொருட்டு, புதிய விரிவான (சிற்றுந்து) திட்டம் 2024 (NEW COMPREHENSIVE SCHEME 2024) இதனை தொடர்ந்து, திருவள்ளூர் மாவட்டத்தில் பேருந்து சேவை இல்லாத வழித்தடங்களில் சிற்றுந்து (Mini Bus) சேவை புதிய விரிவான (சிற்றுந்து) 2024 (NEW COMPREHENSIVE SCHEME 2024)- பொருட்டு, அதற்கான அறிவிக்கை திருவள்ளூர் மாவட்ட அரசிதழில் வெளியிடப்பட்டது. மேற்படி அறிவிப்பினை தொடர்ந்து, 49 வழிதடங்களில் Mini Bus இயக்குவதற்கான விண்ணப்பங்கள் (திருவள்ளூர்/பூவிருந்தவல்லி/ரெட்ஹில்ஸ்) அலுவலகங்களில் பெறப்பட்டது. வட்டார அந்தந்த போக்குவரத்து மேற்படியான 49 வழிதடங்களில் மினி பேருந்துகளை இயக்க 146 விண்ணப்பங்கள் வரவேற்க்கப்பட்டு, அவைகளில் 76 விண்ணப்பதாரர்களுக்கு மாவட்ட போக்குவரத்து அதிகாரி/மாவட்ட ஆட்சியர் அவர்களால் அனுமதி சீட்டு (Permit) வழங்கப்பட்டது.

அதன் அடிப்படையில் அனுமதி சீட்டு வழங்கப் பட்ட வழிதடங்களில் மினி பேருந்துகளை இயக்க தமிழ்நாடு அரசின் உத்தரவின்படி, திருவள்ளூர் மாவட்டத்தில், பொது மக்கள் பயன்பாட்டிற்காக 05 வழிதடங்களான இஸ்லாம் நகர் முதல் சென்னை திருப்பதி சாலை, செங்குன்றம் பேருது நிலையம் முதல் வெளி வட்ட சாலை புழல் முகாம், பூவிருந்தவல்லியில் (மூன்று சேவைகளும்), ஆவடி முதல் கன்னடபாளையம், திருநின்றவூர் பேருந்து நிலையம் முதல் செங்குன்றம் வரை என முதற்கட்டமாக ஆகிய வழித்தடங்களுக்கான சேவையை பொது மக்களின் பயன்பாட்டிற்காக தொடங்கி வைக்கப் பட்டுள்ளது. மீதமுள்ள வழித்தடங்களுக்கான சேவைகளை படிப்படியாக தொடங்கி வைக்கப் படும் என அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சசிகாந்த் செந்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ஜி. ராஜேந்திரன், எஸ். சந்திரன், டி.ஜே. கோவிந்தராஜன் துரை சந்திரசேகர் , திருவள்ளூர் நகர்மன்ற தலைவர் உதயமலர் போக்குவரத்து வட்டார அலுவலர்கள் ராமகிருஷ்ணன் சிவானந்தம் ரவிக்குமார், மாவட்ட ஆட்சியர் அலுவலக மேலாளர் .செல்வம் நகர் மன்ற துணைத் தலைவர் ரவிச்சந்திரன் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### 'ஓரணியில் தமிழ்நாடு' என்ற கழக புதிய உறுப்பினர் சேர்ப்பு திட்டத்தின்படி

# தருமபுரி மேற்கு மாவட்ட கழகத்தின் சார்பாக சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக உறுப்பினர் சேர்க்கை படிவம் வழங்குதல் மற்றும் ஆலோசனைக்கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் அறிக்கை!



தருமபுரி, ஜூன் 18-

தருமபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர் பி. பழனியப்பன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க 01.06.2025 அன்று மதுரையில் நடைபெற்ற பொதுக்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சிறப்பு தீர்மானமான மண் மொழி மானம் காத்திட "ஒரணியில்; தமிழ்நாடு" என்ற கழக புதிய உறுப்பினர் சேர்க்கை திட்டத்தை சட்;டமன்றத் தொகுதி வாரியாக தொடங்கும் விதமாக தருமபுரி மேற்கு மாவட்ட கழகத்தின் சார்பாக சட்டமன்றத் தொகுதி வாரியாக உறுப்பினர் படிவம் வழங்கி ஆலோசனை கூட்டம் வருகின்ற 19.06.2025வியாழக்கிழமை அன்று, காலை 10.00 மணியளவில் பாலக்கோடு சட்டமன்றத் தொகுதி, பாலக்கோடு பேரூராட்சியில் உள்ள நந்தாஸ் பேலஸிலும்;,

பிற்பகல் 12.30 மணிக்கு அரூர் சட்டமன்றத் தொகுதி, அரூர் பேரூராட்சியில் உள்ள என்.என். மஹாலிலும்,

பிற்பகல் 3.30 மணிக்கு பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி, பொம்மிடி ஊராட்சியில் உள்ள மணி மஹாலிலும், மாவட்ட கழக அவைத்தலைவர் மு.மனோகரன்,; தலைமையிலும், மாநில விவசாய அணி துணை செயலாளரும், பாலக்கோடு சட்டமன்றத் தொகுதி பார்வையாளருமான டி.எம்.அரியப்பன், மாநில அமைப்புச்சாரா ஓட்டுநர் அணி துணை செயலாளரும், அரூர் சட்டமன்றத் தொகுதி பார்வையாளருமான சி.செல்லதுரை, திருவண்ணாமலை வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளரும், பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி பார்வையாளருமான எவரெஸ்ட் என்.நரேஷ்குமார் ஆகியோர்களின் முன்னிலையிலும் இக்கூட்டம் நடைபெறும்.

அதுசமயம், நாடாளுமன்ற உறுப்பினர், அந்தந்த தொகுதிக்குட்பட்ட முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய மற்றும் பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தேர்தல் குழு ஒருங்கிணைப்பாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கிளை, வார்டு கழக செயலாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் (BLA2), பூத் டிஜிட்டல் ஏஜெண்ட்கள்(BDA), பாக இளைஞரணி நிர்வாகிகள், ஒன்றிய, பேரூர் கழக இளைஞரணி நிர்வாகிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் அனைவரும் அந்தந்த சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட இடங்களில் தவறாமல் கலந்துக்கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

1. "ஒரணியில் தமிழ்நாடு" கழக உறுப்பினர் சேர்க்கை படிவம் வழங்கி ஆலோசனைகள் வழங்குதல்.

2. 2026 சட்டமன்றத் தேர்தல், கழக ஆக்கப்பணிகள் மற்றும் வளர்ச்சிப்பணிகள் குறித்தும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



சென்னை வடகிழக்கு மாவட்டம், சோழவரம் தெற்கு ஒன்றிய இளைஞரணி தி.மு.க. சார்பாக மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் ஆலோசணைப்படி சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளர் மீ.வே. கர்ணாகரன் தலைமையில் பாடியநல்லூர் ஊராட்சியில் பொதுமக்கள் அனைவருக்கும் நீர், மோர் வழங்கப்பட்டது. உடன் நா.பரசுராமன். முன்னாள் இளைஞரணி அமைப்பாளர் என்.முகம்மது அலி. இரத்தனமாலா, இளைஞரணி துனை அமைப்பாளர் ஆர்.சி.சிவசங்கர், க.பிரபு. கிளை செயலாளர் சங்கர், வி.ஞானம், கே.கண்ணன் கே.கே.நகர் மோகன், ஜாய்சன் உள்ளிட்டோர் பலர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியை சோழவரம் தெற்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் ஆர்.குமரன் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் புதிய விரிவான மினி பஸ் திட்டத்தினை தஞ்சாவூரில் தொடங்கி வைத்ததை தொடர்ந்து திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக 5 வழிதடங்களுக்கான மினி பஸ் சேவையினை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப், மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, எஸ்.சசிகாந்த் செந்தில் எம்பி, வி.ஜி. ராஜேந்திரன் எம்.எல்.ஏ, டி.ஜே. கோவிந்தராஜன் எம்.எல்.ஏ, துரை சந்திரசேகர் எம்.எல்.ஏ, திருவள்ளூர் நகர்மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன், போக்குவரத்து வட்டார அலுவலர்கள் ராமகிருஷ்ணன் சிவானந்தம் ரவிக்குமார், மாவட்ட ஆட்சியர் அலுவலக மேலாளர் செல்வம் நகர் மன்ற துணைத் தலைவர் ரவிச்சந்திரன் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### பொ.த.மதிவாணன் தலைமை! அரிமா சு.சேகர் முன்னிலையில்

# 177வது வட்டத்தில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு அட்டை வழங்கும் விழா!

## தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. – அசன் மௌலானா எம்.எல்.ஏ. பயனாளிகளுக்கு வழங்கினர்!

சென்னை ஜூன் 18-

சென்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரி மேற்கு பகுதி, 177வது வட்டத்தில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்திற்க்கான அட்டை வழங்கும் விழா மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழிகாட்டுதலுடன் காந்தி சாலை TUCS திடலில் 177-வது வட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் பொ.த. மதிவாணன் தலைமையில் நடைபெற்றது. விழாவிற்கு வேளச்சேரி மேற்கு பகுதி கழகச் செயலாளர் அரிமா சு.சேகர் முன்னிலை வகித்தார்.

தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எம்.எச்.அசன் மௌலானா ஆகியோர் கலந்துகொண்டு பொது மக்கள் பயன்பெறும் வகையில் முதலமைச்சரின் விரிவான காப்பீட்டு திட்டம் பதிவு பெற்ற 500 பயனாளர்களுக்கு காப்பீட்டு அட்டை வழங்கி சிறப்பித்தனர்.

இந்நிகழ்ச்சியில் பகுதி அவைத்தலைவர் சி.பழனி, பகுதி துணை செயலாளர் பொ.த. எழில்வாணன், மாவட்ட பிரதிநிதி வி. ஜி. மோகன், சி.தியாகராஜன், தஞ்சை மணிமாறன், வி.கணேஷ் குமார், ஆர். ரமேஷ், சி.வி. இளங்கோவன், பகுதி கழகப் பிரதி நிதிகள் எஸ்..புகழேந்தி செல்வன் சி.பி. கார்த்திக், டி. சதீஷ், எஸ்.சிவசாமி, எல். மலரவன் கழக முன்னோடிகள் மு.கோவிந்தராஜ், இரா.சூரியமோகன், டி. எஸ்.டி.முருகன், பொன் சுதாகர், எம்.எத்திராஜ், கே.லட்சுமணன், டி.குமரேசன், எம்.சந்தோஷ், இரா.சந்திரசேகர், நேசன், பகுதி அமைப்பாளர்கள் டி.பாஸ்கர், என்.தேவேந்திரன், எம்.சத்தியசீலன், பகுதி துணை அமைப்பாளர்கள் என்.மனோகரன், எஸ்.குழந்தைவேலு, மன்ற செயலாளர்கள் ஜி. ஜெயசுந்தர், எம்.சத்தியகுமார், பி.ஹரி பிரபா, டி.மகாலிங்கம், ஜெகநாதபுரம் சரவணன், கே.செங்குட்டுவன், கண்ணன், பாலசுந்தரம், சாமுவேல், ரமேஷ், ஸ்டீபன், சாமுவேல், குமார், தட்சிணாமூர்த்தி, ஜெகநாதபுரம் பிரேம், ஏ. ரமேஷ், பினாய், ஜெ.விக்டர், ரஞ்சித், ராஜன், செல்வா நகர் கணேஷ், முருகன், மோசஸ், ஜி.புருஷ்சோத்தமன், பில் குமார் உள்ளிட்ட அனைத்து கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

வட்ட துணைச் செயலாளர் ஆர். ரமேஷ் நன்றியுரையாற்றினார்.

### பள்ளிப்பட்டு தெற்கு ஒன்றிய செயலாளர்

# ஜி.ரவீந்திரா தாயார் பத்மாவதி மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி செலுத்தினர்!

திருவள்ளூர், ஜூன். 18-

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் பள்ளிப்பட்டு தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் ஜி.ரவீந்திரா அவர்களின் தாயார் ஜி.பத்மாவதி வயது 93, நேற்று 17-06-2025 மாலை 4:30 மணி அளவில் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தகவல் அறிந்து அன்னாரின் உடலுக்கு கழத்தினர் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.



அன்னாரின் இறுதி ஊர்வலம் 18-6-2025 இன்று புதன் கிழமை பகல் 1.30 மணி அளவில் கீச்சலம் கிராமத்தில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு இடுகாட்டுக்கு நல்லடக்கம் செய்யப்படுகிறது என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் திருவள்ளூர் மேற்கு மாவட்டம் பள்ளிப்பட்டு தெற்கு ஒன்றிய திமுக சார்பில் தெரிவித்துக் கொள்கிறோம்.

### கலாநிதி வீராசாமி எம்.பி. – ஜெ.ஜெ.எபினேசர் எம்.எல்.ஏ. – கே.வி.லோகேஷ் பங்கேற்பு!

# சென்னை வடக்கு மாவட்டம் - ஆர்.கே. நகர் கிழக்கு மற்றும் மேற்கு பகுதிக்குட்பட்ட வட்டங்களுக்கான BLA-2, BLC, BDA ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, சென்னை வடக்கு மாவட்டம்ஆர்.கே. நகர் கிழக்கு மற்றும் மேற்கு பகுதிக்குட்பட்ட வட்டங்களில் BLA-2 , BLC, BDA (Booth Digital Agent) ஆலோசனை கூட்டம்பின்வரும் நாட்களில் கீழ்க்கண்ட இடங்களில் பகுதி செயலாளர்கள் S.ஜெபதாஸ் பாண்டியன் இரா. லட்சுமணன், முன்னிலையில்நடைபெற உள்ளது.

| நாள் / நேரம் | வட்டம் | இடம் | தலைமை |
|---|---|---|---|
| 22.06.2025 காலை 9.00 மணி | 41–வது வட்டம் | முருகன் கோயில் மண்டபம், அண்ணாநகர் | கி. தேவன் வட்ட செயலாளர் |
| 22.06.2025 காலை 10.30 மணி | 41(அ) வட்டம் | S.A.Sபார்ட்டி ஹால், மணலி சாலை | ஆர். ஏ. எம். சசிகுமார் வட்ட செயலாளர் |
| 22.06.2025 மாலை 4.00 மணி | 39(அ) வட்டம் | டி. பி. ஆர் சத்திரம், பூண்டி தங்கமால் தெரு | தா.வ.மு.கஜேந்திரன் வட்ட செயலாளர் |
| 24.06.2025 மாலை 5.00 மணி | 40 –வது வட்டம் | பருப்பு வியாபாரிகள் சத்திரம், வ.உ.சி. நகர் | நா.கோதண்டன் வட்ட செயலாளர் |
| 24 .06.2025 மாலை 6.30 மணி | 40(அ) வட்டம் | பருப்பு வியாபாரிகள் சத்திரம், வ.உ.சி. நகர் | மா .நாகராஜன் வட்ட செயலாளர் |
| 29.06.2025 காலை 9.00 மணி | 38–வது வட்டம் | நாடார் திருமண மாளிகை, நேதாஜி நகர் | நேதாஜி யு. கணேசன் வட்ட செயலாளர் |
| 29.06.2025 காலை 10.30 மணி | 38(அ) வட்டம் | நாடார் திருமண மாளிகை, நேதாஜி நகர் | எஸ் . எல். சுந்தர் வட்ட செயலாளர் |
| 29.06.2025 மாலை 4.00 மணி | 42–வது வட்டம் | வாணி மஹால், டி. எச். சாலை | ப.குமார் வட்ட செயலாளர் |
| 29.06.2025 மாலை 5.30 மணி | 42(அ) வட்டம் | வாணி மஹால், டி. எச். சாலை | ச.தமிழ்செல்வன் வட்ட செயலாளர் |
| 29.06.2025 மாலை 7.00 மணி | 39–வது வட்டம் | லக்ஷ்மி ஹால், வீரராகவன் தெரு | N.M.கதிரேசன் வட்ட செயலாளர் |
| 01.07.2025 மாலை 6.00 மணி | 47–வது வட்டம் | சத்தியமூர்த்தி தெரு கொருக்குப்பேட்டை | ஜி.ஏழுமலை வட்ட செயலாளர் |
| 01.07.2025 மாலை 7.00 மணி | 47(அ) வட்டம் | மரியம் திருமண மண்டபம், கொருக்குப்பேட்டை. | M.P.R. ராஜன் வட்ட செயலாளர் |
| 02.07.2025 மாலை 5.00 மணி | 43–வது வட்டம் | எண் 478,T. H. ரோடு, தண்டையார்பேட்டை (அப்போலோ மருத்துவமனை அருகில்) | பொ.து.ராஜா வட்ட செயலாளர் |
| 02.07.2025 மாலை 6.30 மணி | 43(அ) வட்டம் | எண் 478, T. H. ரோடு, தண்டையார்பேட்டை (அப்போலோ மருத்துவமனை அருகில்) | J.பிரேம்ஆனந்த் வட்ட பொறுப்பாளர் |

மேற்கண்ட கூட்டங்களில்,ஆர். கே. நகர் தொகுதிக்குட்பட்ட, மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள்,பகுதி நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள் -அனைத்து அணிகளின் மாவட்ட நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள்மற்றும் BLA-2,BLC, BDA (Booth Digital Agent) கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கின்றேன்.

**ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.**

பொறுப்பாளர், சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.